2026 அக்டோபர் 18

## பொதுக்காலம் 29-ஆம் ஞாயிறு

எசாயா 45:1, 4–6; 1; தெசலோனிக்கியர் 1:1–5b;

மத்தேயு 22:15–21

### முன்னுரை

ஒரு கலங்கரை விளக்கக் காப்பாளர் இருந்தார். ஆபத்தான கடல் வழியே செல்லும் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்ல, அவர் தினமும் மாலையில் விளக்கேற்றுவது வழக்கம். ஒரு நாள் இரவு, பலரும் அவரிடம் எண்ணெய் கேட்டு வந்தனர்: ஒருவர் விளக்குக்கு, மற்றொருவர் சமையலுக்கு, வேறொருவர் குளிர்காய்வதற்கு எனக் கேட்டனர். எல்லோருக்கும் உதவி செய்ய விரும்பிய அவர், பகல் முழுவதும் எண்ணெயைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துவிட்டார். இரவு வந்தபோது, கலங்கரை விளக்கத்தை எரிய வைக்க அவரிடம் போதுமான எண்ணெய் இல்லை. இருளில் பல கப்பல்கள் பாறைகளில் மோதி விபத்துக்குள்ளாயின. மறுநாள் காலையில் அக்காவலர், “என் முதல் கடமையை நான் மறந்துவிட்டேனே!” என்று கண்ணீர் விட்டு அழுதார்.

இன்றைய வாசகங்கள் நமது முதல் கடமையை நினைவூட்டுகின்றன: எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளுக்குச் சொந்தமானவர்களாக வாழ்வதே அது.

உலகம் நம்மிடம் தன் விசுவாசத்தை ஓயாது கேட்கிறது — அரசியல், செல்வம், வெற்றி, பொதுக்கருத்து மற்றும் சுய ஆசை எனப் பல. இருப்பினும், எசாயா இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் உரைக்கிறார்: “நானே ஆண்டவர்; வேறு எவருமில்லை.”

நற்செய்தியில் இயேசுவும் நமக்கு சவால் விடுக்கிறார்: “சீசருக்கு உரியதைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியதைக்கடவுளுக்கும் கொடுங்கள்.” நாணயத்தில் சீசரின் உருவம் இருக்கிறது, ஆனால் நாம் கடவுளின் உருவத்தைச் சுமக்கிறோம். எனவே, நமது ஆழமான விசுவாசம் உலக அதிகாரங்களுக்கு அல்ல, ஆண்டவர் ஒருவருக்கே உரியது.

இந்த நற்கருணை வழிபாட்டில் பங்கேற்கும் நாம், கடவுளின் உண்மையையும் அன்பையும் விட உலகக் குரல்களுக்கு நம் உள்ளத்தில் அதிகம் இடம் கொடுத்த தருணங்களுக்காக மன்னிப்பு கேட்போம். இப்போது இத்திருப்பலியைத் தகுதியோடு கொண்டாட நம்மையே தயாரிப்போம்.

### மறையுரை

ஒரு சிறிய பையன் தன் தாத்தாவுடன் தேர்தல் நேரத்தில் வாக்களிக்கச் சென்றான். வீட்டிற்குத் திரும்பும் வழியில் அவன், “தாத்தா, உண்மையிலேயே இந்த உலகத்தை இயக்குவது யார்? ஜனாதிபதிகளா, அரசர்களா, பணக்காரர்களா அல்லது இராணுவத் தளபதிகளா?” என்று கேட்டான்.

தாத்தா புன்னகைத்து மாலையில் தெரியும் வானத்தைச் சுட்டிக்காட்டினார்: “மேகங்கள் சூரியனை மூடும்போது, சூரியன் மறைந்துவிட்டது போலத் தோன்றலாம். ஆனால் சூரியன் மேகங்களுக்கு மேலே தான் இருக்கிறது; அதுதான் ஒளியைத் தந்து எல்லாவற்றையும் பிணைத்து வைத்திருக்கிறது. கடவுளும் அப்படித்தான். உலக ஆட்சியாளர்கள் சில காலம் சக்தி

வாய்ந்தவர்களாகத் தோன்றலாம், ஆனால் வரலாறு இறுதியில் கடவுளுக்கே உரியது.”

அந்த எளிமையான உரையாடல் இன்றைய வாசகங்களின் மையப் புள்ளியைத் தொடுகிறது.

எசாயா இறைவாக்கினரும் நற்செய்தியும் நம்மை ஒரே கேள்வியால் எதிர்கொள்கிறார்கள்:

உண்மையிலேயே நம் வாழ்வை ஆட்சி செய்வது யார்?

அரசியல் அதிகாரமா? பணமா? பொதுக்கருத்தா? பயமா? கோட்பாடா? அல்லது கடவுளா?

கடவுள் எதிர்பாராத வழிகளில் வரலாற்றை எழுதுகிறார்

எசாயா புத்தகத்தின் முதல் வாசகத்தில் வியப்பிற்குரிய ஒன்று உள்ளது. கடவுள் பாரசீக மன்னன் சைரஸை “தன்னால் திருப்பொழிவு பெற்றவர்” என்று அழைக்கிறார். இஸ்ரயேல் மக்களுக்கு இது அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

சைரஸ் யூதர் அல்ல, அவர் இஸ்ரயேலின் கடவுளை வழிபட்டவருமல்ல. இருப்பினும், கடவுள் அவரை மீட்பின் கருவியாகத் தேர்ந்தெடுத்தார்.

இது எவ்வளவு அதிர்ச்சியானது என்பதைப் புரிந்து கொள்ள, இஸ்ரயேலின் நிலையை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எருசலேம் அழிக்கப்பட்டது. திருக்கோவில் பாழடைந்தது. மக்கள் பாபிலோனியாவுற்கு நாடோடிகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களின் எதிரிகள், “இப்போது உங்கள் கடவுள் எங்கே?” என்று கேலி செய்தனர். இஸ்ரயேல் கைவிடப்பட்டதாகவும், தோற்கடிக்கப்பட்டதாகவும், அவமானப்படுத்தப்பட்டதாகவும் உணர்ந்தது.

அத்தகைய நம்பிக்கையற்ற நிலையில், கடவுள் இறைவாக்கினர் வழியாகப் பேசினார்: “சைரஸைப் பாருங்கள். நான் அவரைப் பயன்படுத்துவேன். அவர் மூலமாக நான் உங்களை விடுவிப்பேன்.”

அப்படியே நடந்தது. சைரஸ் பாபிலியோனைக் கைப்பற்றி, யூதர்கள் தாய்நாடு திரும்பி திருக்கோவிலைக் கட்ட அனுமதித்தார்.

இது நமக்கு என்ன கற்பிக்கிறது?

கடவுள் ஒருபோதும் நமது எதிர்பார்ப்புகளுக்குள் அடைபடுபவர் அல்ல. நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத மனிதர்கள், நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் வழியாக அவர் செயல்பட முடியும். கடவுள் கோவில்களுக்குள் மட்டும் அடைபட்டவர் அல்ல; அவர் வரலாற்றின் ஆண்டவர்.

ஒரு போதகர் 1980-களில் பனிப்போரின் போது இந்த வாசகத்தை வைத்து ஜெபித்ததை நினைவுகூர்ந்தார். அக்காலத்தில் சோவியத் ஒன்றியம் அசைக்க முடியாததாகத் தோன்றியது. நாத்திகக் கம்யூனிசம் வெல்ல முடியாததாக இருந்தது. அப்போது அவர் ஜெபிக்கும் போது ஒரு துணிச்சலான எண்ணம் வந்தது:

“கடவுளால் பிறசமய மன்னன் சைரஸைப் பயன்படுத்த முடிந்தது என்றால், நம் காலத்து தலைவர்களையும் அவரால் மாற்ற முடியாதா?”

அவர் பல ஆண்டுகள் ஜெபித்தார். பின்னர் யாரும் எதிர்பார்க்காத மாற்றங்கள் நிகழ்ந்தன: கம்யூனிச ஆட்சிகள் வீழ்ந்தன, தேவாலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டன, லட்சக்கணக்கான மக்கள் நம்பிக்கையைக் கண்டடைந்தனர். உலகம் சாத்தியமில்லை என்று கருதிய வழிகளில் வரலாறு மாறியது.

மீண்டும் மீண்டும் கடவுள் நமக்கு நினைவூட்டுகிறார்:

"நானே ஆண்டவர்; வேறு எவருமில்லை."

எதிர்காலம் முற்றிலும் அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள் அல்லது தொழில்நுட்பத்தின் கைகளில் மட்டுமே இருப்பதாக நாம் அடிக்கடி நினைக்கிறோம். இன்றைய வாசகங்கள் அந்த மாயைக்குச் சவால் விடுகன்றன. அரசாங்கங்களும் மனிதப் பொறுப்புகளும் முக்கியம்தான், ஆனால் இறுதி வார்த்தை கடவுளுக்கே உரியது.

**இயேசுவுக்கு வைக்கப்பட்ட பொறி**

நற்செய்தியில் மற்றொரு அதிகாரப் போராட்டம் நிகழ்கிறது.

பரிசேயர்களும் ஏரோதியர்களும் இயேசுவிடம் வந்து, "சீசருக்கு வரி கொடுப்பது முறையா, இல்லையா?" என்று கேட்கிறார்கள்.

இது அப்பாவித்தனமான கேள்வி போலத் தோன்றினாலும், அது ஒரு பொறி.

இயேசு "ஆம்" என்றால், மக்கள் அவரை உரோமையரின் கையாளாகக் கருதி நிராகரிப்பார்கள். "இல்லை" என்றால், அரசருக்கு எதிரான கிளர்ச்சியாளர் என்று கைது செய்யப்படுவார்.

இயேசு ஒரு நாணயத்தைக் கேட்கிறார். அதை உயர்த்திக்காட்டி, "இதில் இருப்பது யாருடைய உருவம்?" என்று கேட்கிறார்.

"சீசருடையது," என்கிறார்கள்.

அதற்கு இயேசுவின் புகழ்பெற்ற பதில் வருகிறது:

"சீசருக்கு உரியதைச் சீசருக்கும், கடவுளுக்கு உரியதைக் கடவுளுக்கும் கொடுங்கள்."

முதல் பார்வையில் இது ஒரு சமரசமான அரசியல் பதில் போலத் தோன்றலாம். ஆனால் இயேசு மிக ஆழமான ஒன்றைச் சொல்கிறார்:

நாணயத்தில் சீசரின் உருவம் இருக்கிறது, எனவே நாணயத்தைச் சீசருக்குக் கொடுங்கள்.

ஆனால் நீங்கள் கடவுளின் உருவத்தைச் சுமக்கிறீர்கள். எனவே, உங்களையே கடவுளுக்குக் கொடுங்கள்.

அதுவே உண்மையான செய்தி.

இயேசு வரிகளைப் பற்றி மட்டும் பேசவில்லை. அவர் நமது விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறார். மனித அதிகாரங்களுக்கு நம்மிடம் வரம்பிற்குட்பட்ட உரிமையே உள்ளது. கடவுள் ஒருவருக்கே முழுமையான உரிமை உண்டு.

இது உரோமை உலகப் பின்னணியில் புரட்சிகரமானது; ஏனெனில் பேரரசன் தன்னை தெய்வமாக வழிபடக் கோரினான். ஆனால் இயேசு அதை முற்றிலுமாக நிராகரிக்கிறார். மனித இதயத்தின் முழுமையான சரணடைதலுக்குக் கடவுள் மட்டுமே தகுதியானவர்.

இன்றைய நவீன உலகிலும் இதே போராட்டம் தொடர்கிறது.

நாம் இப்போது பேரரசர்களை வழிபடாமல் இருக்கலாம், ஆனால் நவீன கலாச்சாரம் நம் முழு விசுவாசத்தைக் கேட்கிறது: வெற்றி, செல்வம், தேசியம், இன்பம், சித்தாந்தம், சமூக அங்கீகாரம் போன்றவை.

நற்செய்தி நம்மிடம் கேட்கிறது:

உன் ஆழமான விசுவாசம் யாருக்கு உரியது?

நேர்மையான கேள்விகளும் நேர்மையற்ற கேள்விகளும்

நாம் கேள்விகளை எவ்வாறு கேட்கிறோம் என்பதையும் நற்செய்தி கற்பிக்கிறது.

சில கேள்விகள் உண்மையை நாடும் நேர்மையானவை. மற்றவை மடக்குவதற்கும், தாக்குவதற்கும் கேட்கப்படுபவை.

பரிசேயர்கள் இயேசுவை அணுகியபோதும் அவர்களின் புகழ்ச்சிக்கு பின்னால் பகைமை இருந்தது. இருப்பினும் இயேசு கோபப்படாமல், அவர்களின் நேர்மையின்மையை வெளிப்படுத்தி, ஆழமான உண்மையை வெளிப்படுத்தும் ஞானத்தோடு பதிலளிக்கிறார்.

இன்றைய நற்செய்தி நம்மை அதிக நேர்மைக்கு அழைக்கிறது. திறந்த மனதோடு தேடுபவர்களிடம் கடவுள் செயல்பட முடியும்.

**கிறிஸ்துவில் வேரூன்றுதல்**

இயேசுவின் வார்த்தைகள் நம் மனசாட்சியைப் பரிசோதிக்கத் தூண்டுகின்றன.

கடவுளுக்குச் செய்ய வேண்டிய விசுவாசமும், சமூகத்திற்குச் செய்ய வேண்டிய விசுவாசமும் மோதிக்கொள்ளும்போது என்ன நடக்கும்?

ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பேரரசனை வழிபட மறுத்ததால் பலர் கொல்லப்பட்டனர். நவீன காலத்தில் டீட்ரிச் பான்ஹோஃபர், மாக்சிமிலியன் கோல்பே, மார்ட்டின் லூதர் கிங் போன்ற பலர் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கத் தேர்ந்தெடுத்தனர்.

அவர்களுக்கு அந்தத் துணிச்சலைத் தந்தது எது?

அவர்களின் பிடிவாதமல்ல, மாறாக கிறிஸ்துவில் இருந்த ஆழமான வேரூன்றலே.

இன்று புனித பவுல் தெசலோனிக்கர்களின் “நம்பிக்கையின் செயல்பாடு, அன்பின் உழைப்பு, எதிர்நோக்கின் மன உறுதி” ஆகியவற்றைப் பாராட்டுகிறார். அவர்களின் விசுவாசம் வெறும் உணர்ச்சியல்ல; அது அவர்களின் வாழ்வை வடிவமைத்தது.

அதுவே நமக்கான சவால். கிறிஸ்தவம் என்பது ஞாயிற்றுக்கிழமை அடையாளமாக மட்டும் இருக்க முடியாது. வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் — குடும்பம், அரசியல், வேலை, நிதி, உறவுகள் — கடவுளுக்கே உரியது.

சீசர் நாணயத்தைப் பெறலாம்.

ஆனால் கடவுள் இதயத்தைப் பெறுகிறார்.

புனித தாமஸ் மூர் அரசனுக்குப் பணிந்து போக மறுத்ததால் மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, “நான் அரசனுக்கு நல்ல

சேவகன், ஆனால் முதலாவதாகக் கடவுளுக்கே சேவகன்"
என்று முழங்கினார்.

நாம் நல்ல குடிமக்களாகவும், சமூகத்திற்குப்
பங்களிப்பவர்களாகவும் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.
ஆனால் அனைத்து உலக விசுவாசத்திற்கும் மேலாக ஒரு
பெரிய விசுவாசம் உள்ளது.

ஏனெனில் நாம் சீசரின் சாயலை அல்ல, கடவுளின் சாயலைச்
சுமக்கிறோம்.

உலகின் அதிகாரங்கள் கடந்து போகும்போது, ஒரு உண்மை
மட்டுமே நிலைத்திருக்கும்:

"நானே ஆண்டவர்; வேறு எவருமில்லை." ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai